## சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை

**OS.NO.253/2020** **தேதி.**10.11.2025

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.6 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025 ம் ஆண்டு 10.11.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | | திரு.கோ.முத்துகுமரன் | இனம் | ஆண் |
| த/பெ. | | திரு.சி.கோபால் | ஊர்/வட்டம் | இராணிப்பேட்டை |
| வயது | | 47/2025 | தொழில் | கண்காணிப்பு அலுவலர், இராணிப்பேட்டை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் |

துவக்க நேரம் 12.50 P.M

சாட்சி அழைப்பாணையின்பேரில் முன்னிலையானார். உறுதிமொழி செய்துவைக்கபப்ட்டார்.

<u>வாதி தரப்பில் முதல் விசாரணை:–</u>

1. நான் தற்பொழுது இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் H–பிரிவான பதிவரையில் கண்காணிப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில், தொடர்புடைய வாலாஜா வட்டம், கத்தாரிக்குப்பம் கிராம புஞ்சை சர்வே எண். 114/1 – பைமாஸ் நெம்பர்.94 ஆகியவை குறித்த வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்யவேண்டி எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

2. அழைப்பாணையில் சர்வே எண். 114/1 – பைமாஸ் நெம்பர்.94 க்கான கடந்த 1960 முதல் 1987 ஆண்டு வரையிலான ஆண்டுகளுக்குண்டான 1.அ–பதிவேட்டு, 2.பட்டா, 3.சிட்டா, 4.அடங்கல். 5.புலப்படம் ஆகியவற்றை எடுத்துவந்து சமர்பிக்க உத்தரவிடப்பட்டிருந்தது. மேற்கண்ட சர்வே

எண்ணுக்கான மேற்கண்ட ஆவணங்களை பதிவரையில் தேடிப்பார்த்தேன். எங்கள் பதிவரையில் மேற்கண்ட சர்வே எண்ணுக்கான ஆவணங்கள் எதுவும் இல்லை. எனவே இந்த சர்வே எண் தொடர்புடைய மேற்கண்ட ஆவணங்களை பெறவேண்டி மாநில ஆவண காப்பகத்திற்கு தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் மனு அளித்து அதன்பேரில் மாநில ஆவண காப்பகத்திலிருந்து மேற்கண்ட சர்வே எண் தொடர்பான புலவரைபடம் மட்டும் வழங்கப்பட்டன.

| வ. எண் | ஆவணம் | தன்மை | சான்றாவணம் |
|---|---|---|---|
| 1 | கத்தாரிக்குப்பம் சர்வே எண்.114/1– பைமாஸ் எண்.94 க்கான புலவரைபடம் இது கடந்த 1959 க்கான ஒரு புலப்படம் | சான்றிட்ட நகல் | Ex.X9 |
| 2 | கத்தாரிக்குப்பம் சர்வே எண்.114/1– பைமாஸ் எண்.94 க்கான புலவரைபடம் இது கடந்த 1959 லிருந்து 1968 வரையான ஆண்டுகளுக்கான ஒரு புலப்படம் | சான்றிட்ட நகல் | Ex.X10 |
| 3 | கத்தாரிக்குப்பம் சர்வே எண்.114/1– பைமாஸ் எண்.94 க்கான புலவரைபடம் இது கடந்த 1986 ம் ஆண்டுக்கான ஒரு புலப்படம் | சான்றிட்ட நகல் | Ex.X11 |

3. மாநில ஆவண காப்பகத்திற்கு தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையில் கண்டுள்ள அ–பதிவேடு, பட்டா, சிட்டா,

அடங்கல் ஆகிய ஆவணங்கள் மாநில ஆவண காப்பகத்தில் பாதுகாக்கப்படுவதில்லை என பதில் தரப்பட்டுள்ளது.

4. Ex.X9 புலவரைபடத்தில் சர்வே எண்.114 உட்பிரிவு செய்யப்படாமல் ஒரே பரப்பாக உள்ளது. Ex.X10 புலவரைபடத்தின்படி சர்வே எண்.114, 114/1 முதல் 7 வரையான உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.சர்வே எண்.114/1ன் பரப்பளவாக, வடக்கில் 26.2 மீட்டராகவும், தெற்க்கில் 21.2 மீட்டராகவும், மேற்க்கில் 41.2 மீட்டர் மற்றும் 45.6 மீட்டராகவும், கிழக்கில் 92.2 மீட்டராகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.114/1ன் கிழக்கில் சர்வே எண்.114/2 உள்ளது. சர்வே எண்.114/1ன் மேற்கில் சர்வே எண்.111, 115 உள்ளன. சர்வே எண்.114/1ன் வடக்கில் சர்வே எண்.113 உள்ளது. சர்வே எண்.114/1ன் தெற்க்கில் சர்வே எண்.115 உள்ளது.

5. Ex.X10 புலவரைபடபத்தில் என்ன அளவுகள் குறிப்பிட்டு வழங்கப்பட்டுள்ளதோ அதே அளவுகள் தான் Ex.X11 புலவரைபடத்திலும் வழங்கப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:– இல்லை.

மறு விசாரணை :– இல்லை.

முடிவு நேரம் 01.25 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.

**OS.NO.253/2020**